**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

***(29.08.2015 முதல் 02.09.2015)***

***அறிக்கை எண் 67/2015*** ***தேதி: 28.08.2015***

***மாநிலத்தின் கடந்த வார வானிலை***

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 32°செ முதல் 38°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 22°செ முதல் 28°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 18°செ முதல் 22°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 9°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் ஒரு சில இடங்களில் இலேசான மழை காணப்பட்டது.

***எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (29.08.2015 முதல் 02.09.2015)***

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 76-80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 62-66 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 20 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 29.08.15 | 0 | 33 | 22 | 5 | 76 | 62 | 20 | தென்மேற்கு |
| 30.08.15 | 0 | 33 | 22 | 5 | 77 | 63 | 20 | தென்மேற்கு |
| 31.08.15 | 0 | 33 | 22 | 5 | 78 | 64 | 20 | தென்மேற்கு |
| 01.08.15 | 0 | 33 | 22 | 5 | 79 | 65 | 20 | தென்மேற்கு |
| 02.08.15 | 0 | 33 | 22 | 5 | 80 | 66 | 20 | தென்மேற்கு |

## வேளாண் அறிவுரை

- ✓ வரும் ஐந்து நாட்களுக்கு மேகமூட்டத்துடன் வறண்ட வானிலையும், அதிக காற்றின் வேகமும் எதிர்பார்க்கபடுகிறது ஐந்து மாதங்களுக்கு மேலான கரும்பில் தோகை உரித்து விட்டம் கட்டவும்.
- ✓ ஓணம் பண்டிகைக்கான பழங்கள் அறுவடை செய்யப்பட்ட வாழை மரங்களை தூறுடன் வெட்டி சாய்த்து துண்டுகளாக்கி இயற்கை உரமாக்கவும்.
- ✓ பூக்கும் பருவத்தை அடைந்த குறுவை நெல் பயிருக்கு ஒரு ஏக்கருக்கு 30 கிலோ யூரியா மற்றும் 10 கிலோ மியூரேட் பொட்டாஷ் உரத்தை மேலுரமாக இடவேண்டும். மேலுரம் இடப்பட்ட வயலில் நீர் வடிக்க வேண்டாம்.
- ✓ சம்பா நெல் நாற்றாங்காலில் இலைப்பேன் தாக்குதல் தென்படுவதால் 1 லிட்டர் தண்ணீரில் 2 மில்லி மோனோகுரோட்டோபாஸ் கலந்து தெளிக்கவும்.
- ✓ குளிர் கால கம்போடியா பருத்தி விதைப்பை ஆகஸ்டு மாத இறுதியுடன் முடித்துவிட வேண்டும்.

## குறுஞ்செய்தி

- ✓ வரும் ஐந்து நாட்களுக்கு மேகமூட்டத்துடன் வறண்ட வானிலை எதிர்பார்க்கபடுகிறது. பூக்கும் பருவத்தை அடைந்த குறுவை நெல் பயிருக்கு ஒரு ஏக்கருக்கு 30 கிலோ யூரியா மற்றும் 10 கிலோ மியூரேட் பொட்டாஷ் உரத்தை மேலுரமாக இடவேண்டும். மேலுரம் இடப்பட்ட வயலில் நீர் வடிக்க வேண்டாம்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்
த.நா.வே.ப.கழகம், கோவை.